வட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.67/2021</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோஸ்வா டேனியல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | கிருத்துவர் | மாவட்டம் | திருப்பூர் |

<u>04.12.2023 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கோத்தனூர் கருணாநிதி நகரில் பிறந்ததில் இருந்து குடியிருந்து வருகிறேன். நான் என் தகப்பனாரை பார்த்துள்ளேன். என் தகப்பனாருடன் ராஜகுமாரி, செல்வராணி, தனசேகர், குட்டி ஆகியோர் உடன் பிறந்தவர்கள். என் தாயார் சொல்லித்தான் 1984 ல் என் பெற்றோருக்கு நடந்த திருமணம் எனக்கு தெரியும் என்றால் என் அப்பாவும் சொல்லியுள்ளார். என் அப்பாவின் பூர்வீகம் கண்ணாபுரம் ஆகும். என் அப்பாவின் தாயார் பெயர் பொன்னம்மாள், தகப்பனார் பெயர் கனகராஜ், அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. எந்த வருடம் என்றால் தெரியாது நான் சிறுவயதாக இருந்தபோதே இறந்துவிட்டார்கள். அவர்களது இறப்பு சான்றிதழை நான் ஒப்படைக்கவில்லை. என் தகப்பனார் செகண்ட் கிரேடு வரை படத்துள்ளார். எந்த வருடம் படிப்பை என் தகப்பனார் முடித்தார் என்றால் எனக்கு தெரியாது.

2. முதன்முதலில் என் தகப்பனார் எந்த ஊரில் பணிபுரிந்தார் என்றால் காங்கயத்தை சுற்றியுள்ள கிராங்களில் பணிபுரிந்தார். என்ன கிராமத்தில் என்றால் குறிப்பாக தெரியவில்லை. எத்தனை ஆண்டுகள் என் தகப்பனார் ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் சுமார் 30 ஆண்டுகள் 2004 ல் அவர் ஓய்வு பெற்றார். வெவ்வேறு இடங்களில் என் தகப்பனார் பணிபுரிந்தார். அந்த ஊருக்கு நானும் என் தாயாரும் குடிபோய் குடும்பமாக தங்கினோமா என்றால் நான் குழந்தையாக இருந்தபோது தங்கினோம். குழந்தையாக இருந்தபோது எந்தெந்த ஊரில் நாங்கள் குடும்பமாக இருந்தோம் என்றால் காங்கயம் மட்டும் தான் நினைவில் உள்ளது.

3. ஓய்வு பெறுதவற்கு முன்பு அத்திக்கவுண்டன் புதூரில் தலைமையாசிரியராக இருந்தார். அத்திக்கவுண்டன் புதூரில் என் தப்பனார் பணியாற்றியபோது நாங்கள் என் தப்பனாருடன் குடும்பமாக இருந்தோமா என்றால் என் அம்மா கோயமுத்தூரில் வேலையில் இருந்ததால் நாங்கள் அடிக்கடி போய் பார்ப்போம். நான் பிறந்ததிலிருந்து என் தகப்பனாருடன் எத்தனை ஆண்டுகள் ஒரே குடும்பமாக ஒன்றாக தங்கியிருந்தோம் என்றால் காலாண்டு, அரையாண்டு விடுமுறையில் வருவார், வாரம் ஒரு முறை வருவார். என் தகப்பனார் காங்கயத்தில் இறந்தார். என் தகப்பனார் நானும் என் அம்மாவும் அவருடன் ஒன்றாக இருந்தோமா என்றால் ஆமாம் கோயமுத்தூரில் இருந்து தகவல் கேட்டு இறுதி சடங்கிற்கு சென்றோம். என் தகப்பனார் இறந்த சமயத்தில் யாருடன் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரிந்து யாருடனும் இல்லை.

4. இறப்புச்சான்றிதழில் என் தாயார் பெயரை மாற்ற யாரிடமாவது மனு கொடுத்தேனா என்றால் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் நாளில் மனு கொடுத்தேன் அது வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் அலுவலகத்தில் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் எனது மனுவில் என் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் இல்லை. நான் எனது மனுவில் என் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாக கூறியுள்ளதாக வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள குறிப்பாணையில் சொல்லியுள்ளார்களா என்றால் ஆமாம்.

5. எனது மனுவின் மூலம் தான் என் தகப்பனாருக்கு இரு மனைவிகள் தெரியவருகிறது என குறிப்பாணையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. இறப்புச் சான்றிதழில் என் தாயாரின் பெயரை திருத்த வேண்டும் என்று கொடுத்த மனுவின் பெயரில் தான் வட்டாட்சியர் குறிப்பாணை கொடுத்துள்ளார் என்றால் சாதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் இறந்தவரின் மனைவி பெயர் பாப்பாத்தி என்று கண்டுள்ளதா என்றால் ஆமாம் அது தவறாக கண்டுள்ளது. அந்த இறப்பு சான்றிதழல் எந்த அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது என்றால் பிறப்பு இறப்பு பாதிவாளர் காங்கயம் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சியில் இறப்பு சான்றிதழில் பெயர் திருத்தம் செய்ய வேண்டி மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

6. அந்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாரிசு உரிமை சான்றிதழ் கேட்டு தாசில்தாரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. வாரிசு உரிமை கேட்டு தாசில்தாரிடம் மனு கொடுக்காமல் அது குறித்து நீதிமன்றத்தில் வாரிசு சான்று கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாசில் தார்அலுவலகத்தில் இருந்து சாமிதுறையின் வாரிசுகள் என்று பாப்பாத்தி மற்றும் அவரது மகள் சங்கவி ஆகியோர்களுக்கு வாரிசுரிமை சான்றிதழ் வழங்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1995ம் ஆண்டு பாப்பாத்தி என்பவருக்கும் சாமிதுரை என்பவருக்கும் திருமணம் ஆகி கணவன் மனைவியாக சாமி துறை இறக்கும் வரை காங்கயம் பழைய கோர்ட் வீதியில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சாயல்ல. சாமிதுரையின் ஹெல்த் கார்டு, குடும்ப அட்டை ஆகிய ஆவணங்களில் பாப்பாத்திதான் மனைவியாக கண்டுள்ளது என்றால் இல்லை.

7. என் தகப்பனார் ஓய்வு பெறும் சமயத்தில் அவருக்கு சிங்கில் பென்சன் திட்டத்தில் பென்சன் கொடுப்பதாக சொன்னதால் தனக்கு பாப்பாத்தி என்ற மனைவியும் சங்கவி என்ற மகளும் இருப்பதால் தனக்கு ஓய்வூதியம் முறைப்படி வழங்கப்பட வேண்டும் என அரசு அலுவலகத்திற்கு அவர் கடிதம் எழுதிய விபரம் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் என் தாயாரை விசாரிக்கபோகிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சாட்சிகள் யாரையும் விசாரிக்கபோகிறேனா என்றால் இல்லை அவர்கள் உயிருடன் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் பெற்றோர் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.1 ஆவணத்தை நிரூபணம் செய்வதற்கு என் தாயாரைத்தான் நான் விசாரிக்கவேண்டும் என்றால் அவருக்கு உடல் நலம் சரியில்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் குடும்ப உறுப்பனிர்களின் எண்ணிக்கை 2 என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான் அது அச்சுப்பிழை. வா.சா.ஆ.2 போட்டோவை எடுத்த நபரின் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்றால் 15.02.1984ல் எடுக்கப்பட்டது. அது சம்மந்தமாக அந்த புகைப்படத்தில் ஏதேனும் குறிப்புகள் உள்ளதா என்றால் தெரியாது.

8. என் தகப்பனார் உயிருடன் இருந்தவரை எந்த வங்கியில் கணக்கு வைத்திருந்தார் என்றால் தெரியாது. அரசு ஊழியருக்கு எந்த வங்கியில் கணக்கு இருக்கும் என்றால் பொதுவாக பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு இருக்கும். என் தகப்பனார் பெயரிலான SBI வங்கி கணக்கு 1ம் பிரதிவாதி மற்றும் என் தகப்பனார் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் அவ்வாறு இருக்காது அது பற்றி எனக்கு தெரியாது. நான் உள்ளூரில் உள்ள நபர்களின் பெயர் ஒற்றுமையை வைத்துக்கொண்டு நாங்கள் தான் சாமிதுரையின் வாரிசுகள் என்று மனு கொடுத்ததால் தான் நான் வாரிசுகள் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சாமிதுறை முறையாக 1995 ஆண்டு திருமணம் செய்து 1990 முதல் அவர் வேலை செய்த இடங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்று குடும்பமாக வாழ்ந்து வந்து 2000ம் ஆண்டில் காங்கயத்தில் வீடு கட்டி செட்டிலாகிவிட்டார்கள் என்றால் சரியல்ல. சாமிதுரையின் சகோதர சகோதரிகள் யாரையாவது சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் இல்லை. அவர்களை விசாரித்தால் எங்களது பொய் விபரம் தெரிந்து

விடும் என்பதால் தான் விசாரிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. சாமி துரையின் சர்விஸ் ரேக்காடை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சாமிதுரை எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2018 ல். தேதி கிழமை தெரியுமா என்றால் ஜுன் மாதம். தேதி கிழமை தெரியவில்லை. சாட்சி மீண்டும் ஜுன் 6 என்கிறார். சாமிதுரையின் இறப்பில் நாங்கள் கலந்து கொண்டோமாஎன்றால் ஆமாம். அப்போது உறவினர்கள் மற்றும் பொதுமனிதர்கள் இருந்தார்கள். பொது மனிதர்கள் யாரையாவது என் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்போகிறேனா என்றால் இல்லை. நான் கேட்டுள்ள பாரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சாமிதுரையின் சட்டப்படியான மனைவி மற்றும் வாரிசு உள்ள நிலையில் நாங்கள் தான் வாரிசு என்று பொய்யாக கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது வழக்குரையில் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித நிவாரணமும் கோரவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறப்பு சான்றிதழில் பெயர் மாற்றம் கோரி 3 ம் பிரதிவாதியிடம் நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல கொடுத்தேன். அந்த மனுவை நான் நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்கிறேன். தாசில்தாரிடம் வாரிசு சான்றிதழ் கேட்டு நான் விண்ணப்ம் எதுவும்

கொடுக்கவில்லைஎன்றால் கொடுத்தேன். விண்ணப்பத்தை நான் நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்கிறேன். 2, 3 பிரதிவாதிகள் முறையாக விசாரித்து தான் வாரிசு சான்றிதழ்., இறப்பு சான்றிதழ் வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல, இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்